# மூலிகை வளர்ப்போம்

# பயன் பெறுவோம்

 

## 10. வசம்பு

**தாவரவியல் பெயர்:** *Acorus calamus Linn*

**குடும்பம்:** Araceae

**சிங்களப் பெயர்:** வதகஹ

**சமஸ்கிரத பெயர்:** வச்சா

**தமிழ் பெயர்:** வசம்பு

**ஆங்கிலப் பெயர்:** Calamus root/ Sweet flag

**நடுகை பாகம்:** கோண மொட்டுக்களை (கணு மொட்டு) கொண்ட கிழங்கு துண்டுகள்

**மருந்தாக பயன்படும் பாகங்கள்:**

- முழுதாவரமும் பயன்படும்
- விசேடமாக காய வைக்கப்பட்டு பெறப்பட்ட கிழங்குகள்/ உலர்ந்த கிழங்குகள்

### அறிமுகம்

மனதை அமைதிப்படுத்தும், மனதை தெளிவுப்படுத்தும், சிறுநீரை சுத்தப்படுத்தும், நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்தும் மூலிகையாக அறியப்படும். இது சிசுக்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் அஜிரண கோளாறுகள், வாந்தி, பூச்சி கடி போன்றவற்றிற்கு கை மருந்தாக பயன்படும் மிகவும் பயனுள்ள தாவரமாகும். வேறு பயிர்கள் பயிரிட முடியாத சதுப்பு நிலங்களில் வசம்பு பயிரிட உகந்தது. பொருளாதார பயிர்ச்செய்கையாக வசம்பு பயிரிடப்படுவதன் மூலம் அந்நிய செலாவணியை மீதப்படுத்த முடிந்துள்ளது.

### தாவரவியல் விளக்கம்

நிலக்கீழ் தண்டாக சதுப்பு நிலங்களில் வளரக்கூடிய, பல வருடங்கள் நிலைத்திருக்கக் கூடிய, நறுமணமுடைய, தண்டையுடைய தாவரமாகும். நிலத்தில் பரந்து வளரக்கூடிய கிளைத்த தண்டுடையது. இலைகள் எளிமையானவை. இரு பக்கத்திலும் காணப்படும். 90-180 cm நீளமும் 1.5-4 cm அகலமும் உடையது. பிரகாசமான பச்சை நிறமானது. கூர்மையானது. மத்திய இலைப் பகுதி தடிப்பானது. இலைகள் விளிம்பு நேர்த்தியானது. இலை நரம்பு சமாந்தரமானது.

### விவசாய விளக்கம்

இதன் முளைக்கக்கூடிய கோண மொட்டுக்கள்/ தளிர்கள் பயிரிடுவதற்காக பயன்படுத்தப்படுகிறது. நீர் நாட்டமுள்ள மூலிகை என்பதால், நிழல் காரணமாக நெல் சாகுபடிக்கு பொருந்தாத வயல் நிலங்களில் பயிரிடலாம். சுமார் 5 cm நீர் மட்டத்தை பராமரிப்பதன் மூலம் பக்கவாட்டு தளிர்களின் தேவையற்ற வளர்ச்சியை கட்டுப்படுத்தலாம். நிலம் சரிசெய்யப்பட்டதன் பின் தாவரம் பயிரிட 2 கிழமைகளுக்கு முன் ஒரு சாக்கு நன்கு உக்கிய காபன் பசளையை சதுப்பு நிலத்தில் 3*3 m பரப்பளவில் சேர்த்து மண்ணுடன் நன்கு கலக்க வேண்டும். பயிர்கள் 45*45 cm இடைவெளியில் பயிரிடப்பட வேண்டும்.

### அறுவடை மற்றும் சேமிப்பு

பயிர்களை பயிரிட்டு 9-18 மாதங்களுக்கிடையில் அறுவடை செய்ய முடியும். சதுப்பு நிலத்தில் இடைக்கிடையில் காய் (கரல்) போன்ற தோற்றமுள்ள பூ தோன்ற ஆரம்பிக்கும் போது அறுவடை செய்வது உகந்தது. தண்டு உடையாத வண்ணம் பிடுங்கி எடுக்கப்பட்ட வசம்பு பயிர்களில் முளைக்கக்கூடிய கணுக்களை உடைய தளிர்கள்/ மொட்டுக்கள் மீண்டும் பயிரிட வைத்துக் கொண்டு நிலத்தடி தண்டின் இலை மற்றும் வேர் என்பவற்றை அகற்றி 20 cm துண்டுகளாக வெட்டி நிழலில் காயவைத்தல். வசம்பின் நிலக்கீழ் தண்டின் ஆவியாகக்கூடிய எண்ணெய் பதார்த்தங்கள் காணப்படுவதினால் கடும் சூரிய ஒளியில் காய வைக்கக் கூடாது. நீர் இழக்கப்பட்டு நன்கு காய்ந்த பின் பருத்தித் துணி பைகளில் அல்லது சாக்குகளில் பேதட்டு உலர்ந்த மற்றும் குளிர் இடத்தில் களஞ்சியப்படுத்த வேண்டும்.

### தற்போதைய பயன்பாடு மற்றும் சந்தை நிலைமை

ஆயுர்வேத மருந்துகளின் உற்பத்திக்கு மிகவும் பரவலாக பயன்படுத்தப்படும் மருத்துவப் பொருளான வசம்பு சமீபகாலமாக இறக்குமதியில் வேகமாக அதிகரித்து வரும் ஒரு மருந்தாகும். இந்த நாட்டில் ஆண்டுக்கு சுமார் 40,000 kg பயன்படுத்தப்படுகின்றது.

ஒரு கிலோவின் விலை

**ஆக்கம்:**
வைத்தியர் லக்ஸாந்த குணசிங்க,
ஆயர்வேத சமூக சுகாதார வைத்திய அதிகாரி,
கங்கவட்ட கோரல.

**தமிழாக்கம்:**
வைத்தியர் எப். எச். கைசர்தீன்,
ஆயர்வேத சமூக சுகாதார வைத்திய அதிகாரி,
கங்க இஹல கோரல.